முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண்.118 /2022

நாள். 04.02.2026

வா.சா.3 – திரு.ஆஸ்டின்

த/பெ - திரு.காந்தி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) முதல் விசாரணை சாட்சிய வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் உங்களுக்கு தெரியாது என்றால் ஓரளவுக்கு தெரியும். உங்கள் தந்தைக்கு பாத்தியப்பட்ட வயல் வாதி வயலுக்கு வடக்கே உள்ளது என்பதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். உங்கள் தந்தைக்கு பாத்தியப்பட்ட வயல் வாதி வயலுக்கு வடக்கே உள்ளது என பொய்யாக கூறுகிறீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் வயலுக்கு தெற்கே உள்ள வயலில் வாதிகள் வாழை பயிர் செய்து வருகிறார்கள் என்றால் தற்போது நெல் போட்டுள்ளார்கள், வாழையும் பயிர் செய்வார்கள் என்றால் சரி தான்.

2) உங்கள் வயலுக்கு தெற்கே மின்சாரம் தயாரிக்கும் காற்றாலை உள்ளது என்றால் என் வயலுக்கு தெற்கே தள்ளி உள்ளது. மின்சாரம் தயாரிக்கும் காற்றாலைக்கு செல்லும் வாகனங்கள் உங்கள் வயல் வழியாக தெற்கு பக்கமாக போகும் என்றால் சரி தான். உங்கள் வயலுக்கு கிழக்கு தவிர மற்ற வடக்கே, தெற்கே, மேற்கே உள்ள வயல்களுக்கு கிழக்கு பக்கம் உள்ள தேசிய நெடுஞ்சாலைக்கு எப்படி செல்வார்கள்

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.04 04:33:24 +0530

என்றால் குளத்து பக்கம் வழியாக தேசிய நெடுஞ்சாலைக்கு செல்வார்கள் என்றால் சரி தான்.

3) உங்கள் வயல்களுக்கு எந்த அடைப்பும் கிடையாது என்றால் சரி தான். சர்வே எண். 1214/2 க்கு வடக்கு பக்கம் யாருடைய சொத்து உள்ளது என்றால் வாதியின் சகோதரர்கள் சொத்தும் நெல்லை சூர்யா சொத்தும் உள்ளது. சர்வே எண். 1201/2 ஏ 1 சொத்துக்கு தெற்கு பக்கம் யார் சொத்து உள்ளது என்றால் குமாரசாமி நாடார் இடம் உள்ளது. சர்வே எண். 1201/2 பி1 க்கு தெற்கு பக்கம் யார் சொத்து உள்ளது என்றால் துரைப்பழம் நாடார் சொத்து உள்ளது.

4) பிரதிவாதிகள் சொத்துக்கு தென் கிழக்கு பக்கத்தில் மூலையில் ஒரு கிணறு உள்ளது என்றால் சரி தான். பிரதிவாதியின் சொத்துக்கு மேற்கு பக்கம் உள்ளவர்கள் தேசிய நெடுஞ்சாலைக்கு வருவதற்கு வாதியின் சொத்துக்கு வடக்கே உள்ள சொத்து வழியாக வருவார்கள் என்றால் எனக்கு தெரியாது. நீங்கள் உங்கள் வயலுக்கு போர் போட்டு பயிர் செய்து வருகிறீர்கள் என்றால் கிணறும் உள்ளது, போர் போட்டு குளத்து தண்ணீரில் பயிர் செய்து வருகிறேன்.

5) நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் பிரதிவாதிகளின் சொத்துக்களை சுற்றி 4 பக்கமும் வேலி போட்டுள்ளார்கள் என்ற விவரத்தை வாதி உங்களிடம் தெரிவித்தாரா

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.04 04:33:32 +0530

என்றால் சொல்லவில்லை. பிரதிவாதிகள் இடத்தை சுற்றி முழுவதும் கம்பி வேலிகள் உள்ளதா என்றால் முழுவதும் இல்லை. ஆனால் 20 அடி நீளம், 15 அடி வீதி கம்பி வேலி இல்லை. வாதி சொத்திற்கு 3 பக்கமும் எந்த அடைப்பும் இல்லாமல் உள்ளது என்றால் சரி தான். சர்வே எண்.1214/2 ல் யார் யாரெல்லாம் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் குறிப்பாக யார் பயிர் செய்து வருகிறார்கள் என்றால் தெரியாது.

6) இந்த வழக்கு சம்மந்தப்பட்ட விஜயலெட்சுமி என்பவரை தெரியுமா என்றால் வாதியின் அக்கா விஜயலெட்சுமி ஆவார். முதல் விசாரணை சாட்சிய வாக்குமூலத்தில் தேசிய நெடுஞ்சாலை இருப்பதாக கூறி உள்ளீர்கள் அந்த பாதை நேராக உள்ளதா என்றால் நேராக உள்ளது. உங்கள் தந்தைக்கோ, வாதியின் தந்தைக்கோ எந்த வித சொத்தும் இல்லை என்றால் சரியல்ல. வாதி, பிரதிவாதி சொத்துக்களை நீங்கள்பார்வையிட்டதில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.04 04:33:37 +0530